# DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
In the Court of the Judicial Magistrate No.I, Mayiladuthurai
DVC.NO. 37/2021

Deposition of Cross of Pw2 Dt. 13.05.2026

| | |
|---|---|
| Name | அன்பு |
| Father Name | வீராச்சாமி |
| Village | காளி |
| Age | 55/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 on the day 13.05.26.

**எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை**

நான் தாக்கல் செய்துள்ள நிருபண வாக்குமூலத்தில் உள்ள விவரங்கள் யார் சொல்லி தயார் செய்யப்பட்டது என்றால் மனுதாரர் சொல்லி தயார் செய்யப்பட்டது. மனுதாரரை எனக்கு எப்படி தெரியும் என்றால் எனது ஊர்காரர் மற்றும் சித்தப்பா முறை ஆவேன். மனுதாரர் வீட்டிற்கும் எனது வீட்டிற்கும் எவ்வளவு தூரம் என்றால் ஒரே தெருவில் 4, 5 வீடு தள்ளி உள்ளது. நான் சாட்சியம் அளிப்பதற்கு நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வரப்பெற்றதா என்றால் இல்லை. மனுதாரர் அழைத்ததன் பேரில் சாட்சி சொல்ல வந்துள்ளேன். மனுதாரருக்கு திருமணம் எப்போது நடந்தது என்றால் 2015 மே மாதம் நடந்தது. எங்கு திருமணம் நடந்தது என்றால் எதிர் மனுதாரர் வீட்டில் திருமணம் நடந்தது. எந்த நேரத்தில் நடந்தது என்றால் ஞாபகம் இல்லை. எதிர்மனுதாரர் தற்போது எங்கு வசித்து வருகிறார் என்றால் காளி செட்டித்தோப்பு மெயின் ரோட்டில் வசித்து வருகிறார். திருமணம் நடப்பதற்கு முன்பாக ஏதேனும் பிரச்சனை நடந்ததா என்றால் இல்லை. திருமணத்திற்கு பின்புதான் பிரச்சனை ஆனது. திருமணத்திற்கு முன்பு ஊரில் வைத்து பேசப்பட்டது என்றால் சரிதான். ஊர் நாட்டாமையாக நான்தான் அப்போது இருந்து வந்தேன் என்றால் சரிதான். மனுதாரர் மற்றும் எதிர் மனுதாரர் திருமணம் சம்பந்தமாக எந்த இடத்தில் வைத்து ஊர் பஞ்சாயத்து பேசப்பட்டது என்றால் காளி மாரியம்மன் கோவிலில் ஊர் பெரியவர்கள் அம்பேத்கர், இளங்கேசன் ஆகியோர் மற்றும் சிலரும் இருந்தார்கள். அதன் பின்பு காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்களா என்றால் மயிலாடுதுறை மகளிர் காவல் நிலையத்தில் கொடுத்தார்கள். மனுதாரர் தற்பொழுது தனது பெற்றோர் வீட்டில் இருந்துவருகிறார் என்றால் சரிதான். எத்தனை முறை காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்கள் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரர் ஹோட்டல் நடத்தி வருவதாக எனது நிருபண வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அதனை யார் நடத்தி வருகிறார் என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் சகோதரரான புஷ்பராஜ் நடத்தி வருகிறார் என்றால் எதிர்மனுதாரரும் மேற்படி ஹோட்டலுக்கு வருவார். எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு நிலங்கள் உள்ளதாக எனது வாக்குமூலத்தில் சொல்லியுள்ளேன் அந்த நிலங்கள் யாருக்கு சொந்தமானது என்றால் எனக்கு தெரியாது. எதிர்மனுதாரரின் குடும்ப உறுப்பினர்கள் அதனை பார்த்து வருகிறார்கள். எதிர்மனுதாரர் குடும்பத்திற்கு எவ்வளவு நிலங்கள் உள்ளது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிர்மனுதாரர் கூறை வீட்டில் வசித்து வருகிறார் என்றால் சரிதான். பின்பக்கமாக அரசாங்கத்தால் கொடுக்கப்பட்ட

அன்பு

மானியத்தில் அடித்தளம் போடப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் அவரது பெற்றோர் மற்றும் சகோதரர்களுடன் கூட்டுக்குடும்பமாக வசித்து வருகிறார் என்றால் சரிதான். எதிர்மனுதாரர் காளி கிராமத்தில் தங்கி விவசாயம் மற்றும் கூலி வேலை செய்துவருகிறார் என்றாலும் குடும்பத்திற்கு பொதுவான செங்கல் சூளையில் வேலை செய்து வருகிறார் என்றாலும் செங்கல் சூளை பொதுவாக வைத்து நடத்தி வருகிறார்கள். மனுதாரரின் குடும்பமும் கூலி வேலை செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். எதிர்மனுதாரர்கள் மனுதாரரை அடித்து கொடுமைபடுத்தியது பற்றி எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது. சீர்சாமான்கள் மற்றும் வரதட்சணை கேட்டது எனக்கு நேரிடையாக தெரியுமா என்றால் தெரியாது. மனுதாரரும் எதிர்மனுதாரரும் ஒரே வீட்டில் சேர்ந்து வாழ்ந்தார்களா என்றால் ஆமாம். எந்த வீட்டில் சேர்ந்து வாழ்ந்தார்கள் என்றால் எதிர்மனுதாரருக்கு கொடுத்த வீட்டில் வாழ்ந்து வந்தார்கள். எதிர்மனுதாரருக்கு கொடுத்த இடத்தில் மனுதாரரின் பெற்றோர்கள் வீடு கட்டி கொடுத்தார்கள் என்றால் சரிதான். காவல் நிலையத்தில் புகார் கொடுத்துதான் மேற்படி வீடு கட்டப்பட்டது என்றால் சரிதான். நான் மனுதாரருக்கு நெருங்கிய உறவினர் என்பதால் மனுதாரருக்கும் எதிர்மனுதாரருக்கும் திருமணம் நடக்காமலேயே திருமணம் நடந்ததாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. மனுதாரரின் குழந்தை எதிர்மனுதாரருக்கு பிறக்கவில்லை என்றால் சரியல்ல. மனுதாரருக்கு உறவினர் என்பதால் உண்மைகளை மறைத்து பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

என்னால் எடுத்துக்கொள்ளப்பட்டு, எதிரின் முன்னிலையில் சா. சிக்கு படித்துக் காட்டப்பட்டு ... ஒப்புக்கொள்ள ... ஏற்கப்பட்டது